பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**12 06 2026** **FRIDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

**1)** தொழில்துறை விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக பெண்கள் அனைத்துத்துறைகளிலும் முத்திரை பதித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**3)** தமிழக சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான புத்தாக்க பயிற்சி வரும் **16** மற்றும் **17**-ஆம் தேதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**4)** விவசாயிகள் நலனில் அக்கறையின்றி தவெக அரசு செயல்பட்டு வருவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

**5)** உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Dhiraj Bommadevara** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<>>>>>>

தொழில்துறை விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழில் வெளியான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, தொழில்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் அதன் வளர்ச்சியின் வேகம் குறித்து அந்த கட்டுரையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக பெண்கள் அனைத்துத்துறைகளிலும் முத்திரை பதித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், கடந்த 12 ஆண்டுகளாக மகளிர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு நிறைவேற்றியுள்ள திட்டங்களை பட்டியலிட்டுள்ளார்.

மகளிர் மேம்பாடு என்ற நிலையை மாற்றி, மகளிர் தலைமையிலான மேம்பாடு என்ற அடிப்படையில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மக்களவையிலும், சட்டப்பேரவைகளிலும், மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதை செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையையும் திரு அமித் ஷா சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான புத்தாக்க பயிற்சி வரும் 16 மற்றும் 17-ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளதாக பேரவைத் தலைவர் திரு ஜே சி டி பிரபாகர் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — ஜே சி டி பிரபாகர் 53 Sec. )***

<<<<<<>>>>>>

தில்லியில் நடைபெற்ற நித்தி ஆயோக் கூட்டத்தில் திமுக அரசின் சாதனைகளைத்தான் முதலமைச்சர் திரு விஜய் தமது அரசின் சாதனைகள்போல் படித்ததாக எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தேர்தல் பிரச்சாரத்தின்போது தமிழகம் கடனில் தத்தளிப்பதாக குற்றம் சாட்டிய திரு விஜய், தற்போது நாட்டிலேயே

பொருளாதார வளர்ச்சியில் இரண்டாவது மிகப்பெரிய மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று கூறியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

நித்தி ஆயோக் கூட்டத்தில் தெரிவித்த கருத்துகள் தவெக அரசின் ஒருமாத கால சாதனைகளா அல்லது திமுக அரசின் ஐந்தாண்டுகால சாதனைகளா என்பது குறித்து முதலமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும் என்று திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

விவசாயிகளின் நலனில் அக்கறையின்றி தவெக அரசு செயல்பட்டு வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், குறித்த காலத்திற்குள் மேட்டூர் அணை திறக்கப்படாததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளதாக கூறியுள்ளார்.

இதனை சரிசெய்ய நடவடிக்கை எடுக்காமல், சிறப்பு தொகுப்பு என்ற பெயரில் ஏமாற்று அறிவிப்பை தவெக அரசு வெளியிட்டுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகளுக்கு **24** மணிநேரமும் வழங்கப்பட்ட மும்முனை மின்சாரத்தை தற்போது **18** மணிநேரமாக தவெக அரசு குறைத்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

விவசாயிகளின நலனை கருத்தில்கொண்டு மேட்டூர் அணையிலிருந்து நீரை திறந்து, அது கடைமடை வரை சென்றடைவதை

உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், சில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 32 Sec. )***

<<<<<<>>>>>>

சேலம் விமான நிலையத்தை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் இயக்குநர் திரு **Naushad** கூறியுள்ளார்.

இன்று சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — நவ்சாத் - 39 Sec. )***

<<<<<<>>>>>>

கீர்த்தி சக்ரா விருது பெற்றது தமக்கு கிடைத்த பெரிய அங்கீகாரம் என்று தேனியை சேர்ந்த ராணுவ வீரர் மீனாட்சி சுந்தரம் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது நாட்டிற்காக ரத்தம் சிந்தியதை நினைத்து பெருமிதம் கொள்வதாக தெரிவித்தார்.

***(Sound Byte — மீனாட்சி சுந்தரம் — 47 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருச்சி மாவட்ட வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து மாநில அமைச்சர் திரு ரமேஷ் தலைமையில் இன்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

------------

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பல்வேறு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு அங்காடிகளில் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு காந்தி ராஜ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

----------------

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பிரதமரின் திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்ட தொடக்க விழா இன்று நடைபெற்றது.

------------

திருப்பூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆட்சியர் திரு மணீஷ் நாரணவரே இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------

கடலூர் மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------

நாமக்கல் மாவட்டத்தில் குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றன.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Dhiraj Bommadevara** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

துருக்கியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **6-2** என்ற புள்ளிக் கணக்கில் இத்தாலியின் **Mandia Massimilliano**-வை வென்றார்.

----------------

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் **Hangzhou**-வில் அடுத்த மாதம் **20**-ஆம் தேதி தொடங்கி, **29**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள போட்டியில் **Anish, Omkar Singh, Elavaniel Valarivan** உட்பட **30** பேர் இடம்பெற்றுள்ளனர்.

இதேபோல், எகிப்தின் கெய்ரோவில் அக்டோபர் மாதம் **8**-ஆம் தேதி தொடங்கி, **16**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள போட்டியில் **Arjun Babuta, Dhanush Srikanth, Divya, Rhythm Sangwan** உட்பட **30** பேர் இடம்பெற்றுள்ளனர்.

-------------------

பிரான்சில் நடைபெற்றுவரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Anwesha Gowda** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-11, 21-17** என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Leona Lee**-ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Lakshay Sharma**-வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் **21-17, 21-19** என்ற செட் கணக்கில், பிலிப்பைன்சின் **Jewel Angelo Albo**-வை வென்றார்.

--------------

பிரேசிலின் **Sao Jose**-ல் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Prisha Goel** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**<<<<<<<END>>>>>>>**